**வாக்குமூலம்**
**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**
**O.S.No.74/2022**
**வழக்கு சாட்சி PW.1**
**1873ம் ஆண்டின் 10வது விதியின்படி திரு.K.சிலம்பரசன் அவர்களால் திறந்த நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சாமியப்பன் | தொழில் | : விவசாயம் |
| தகப்பனார் பெயர் | : ராமசாமிகவுண்டர் | கணவர் பெயர் | : |
| கிராமம் | : கரியாம்பட்டி | வயது | : சுமார் 65 |
| தாலுக்கா | : ஒட்டன்சத்திரம் | நாள் | : 07.11.2025 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | |

**6 முதல் 9, 12 முதல் 15 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணை**

நான் கரியாம்பட்டியில் குடியிருந்து வருகிறேன் என்றால் ? சரிதான். வழக்கு சொத்துக்கள் காலி இடம் என்றால் ? சரிதான். தாவா சொத்துக்களின் சர்வே எண் தெரியுமா என்றால் ? தெரியும். சர்வே எண்.424/2சி. அதற்கு முன்பு என்ன சர்வே எண்ணாக இருந்தது என்றால் ? சர்வே எண்.424/2. நான் தாவா சொத்தை வாங்குவதற்கு முன்பு வழக்குரைஞரிடம் சட்ட கருத்துரை ஏதேனும் வாங்கினேனா என்றால் ? இல்லை. நான் 5ம் வகுப்பு வரை படித்துள்ளேன். தமிழ் எனக்கு எழுத படிக்க தெரியும். 7ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையை படித்து பார்த்தேனா என்றால் ? ஆமாம், படித்து பார்த்தேன். பழனி சார்பு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்த விபரம் தெரியுமா என்றால் ? தெரியும். கேள்விபட்டுள்ளேன். இந்தவழக்கிற்கு பிறகு தெரிந்து கொண்டேன். என்னிடம் காட்டப்படும் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி, அ.வ.எண்.277/1993 என்ற வழக்கின் தீர்ப்பாணை என்றால் ? சரிதான். <u>07.10.1996 தேதியிட்ட அ.வ.எண்.277/1993 வழக்கின் தீர்ப்பாணை பி.வா.சா.ஆ.1</u>. கார்த்திகை வேல் தான் அ.வ.எண்.277/1993 என்ற வழக்கினை

தாக்கல் செய்துள்ளார் என்றால் ? அது பற்றி எனக்கு தெரியாது. அ.வ.எண்.277/1993 பற்றிய வழக்கு விபரங்கள் தெரியாது. என்னிடம் காட்டப்படும் மேல்முறையீட்டு வழக்கு எண்.17/1997 என்ற வழக்கினை கார்த்திகை வேல் பழனி சார்பு நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்துள்ளார் என்றால் ? அந்த விபரம் எனக்கு தெரியாது. மேற்படி மேல்முறையீட்டு மனுவானது 19.03.2002ம் தேதி தள்ளுபடி ஏற்பட்டுள்ளது என்றால் ? அது பற்றி எனக்கு தெரியாது. அ.வ.எண்.277/1993 என்ற வழக்கில் குறிப்பிட்டுள்ள சொத்துக்கள் ஒட்டன்சத்திரம் கிராமம், சர்வே எண்கள்.424/2எ, 424/2பி, 424/2சி என்றால் ? சரிதான். அ.வ.எண்.277/1993 என்ற வழக்கில் 4 முதல் 7 பிரதிவாதிகளின் தகப்பனாரும், 8, 9 பிரதிவாதிகளின் பழனியம்மமாள் வழி தாத்தா பெரியண்ணகவுண்டர் பிரதிவாதி என்றால் ? அது பற்றி எனக்கு தெரியாது. அ.வ.எண்.277/1993 என்ற வழக்கில் 424/2சி என்ற உட்பிரிவில் 15 செண்ட் நிலமானது இவ்வழக்கு பிரதிவாதிகளின் முன்பாத்தியஸ்தரான பெரியண்ணகவுண்டருக்கு பாத்தியம் என்று தீர்ப்பு ஏற்பட்டுள்ளது என்றால் ? அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்தை பொறுத்து நான் ஒட்டன்சத்திரம் வட்டாட்சியரிடம் பட்டா மாறுதல் செய்ய மனு கொடுத்துள்ளேனா என்றால் ? ஆமாம், மனு கொடுத்துள்ளேன். ஒட்டன்சத்திரம் வட்டாட்சியர் கடந்த 04.12.2015ம் தேதி உத்தரவு பிறப்பித்தார் என்றால் ? சரிதான். உத்தரவிற்கு முன்பாக பட்டா எண்.1131 என்ற பட்டாவில் பிரதிவாதிகளின் பெயர் ஏற்கனவே தாக்கலாகியுள்ளது என்றால் ? சரிதான். **கடந்த 06.06.2016 தேதியிட்ட பட்டா எண்.1131 பட்டாவிற்கான நில உரிமை விபரப்பட்டியலின் கணினி பதிவிறக்க நகல் பி.வா.சா.ஆ.2**. தாவா சொத்துக்களை நான் கிரையம் பெறுவதற்கு முன்பாகவே இவ்வழக்கு பிரதிவாதிகளுக்கு சர்வே எண்.424/2சி ல் 17 செண்ட் நிலங்கள் பாத்தியப்பட்டது என்று நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது என்றாலும், பட்டாவும் வழங்கப்பட்டுள்ளது என்றாலும் ? அது பற்றி எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் என்னுடைய முன்பாத்தியஸ்தரின்

உரிமையை காட்டக்கூடிய ஆவணங்கள் அல்ல என்றால் ? சரியல்ல. நான் கிரையம் பெற்ற சொத்தினை பொறுத்து எனக்கு கிரையம் கொடுத்த நபர்களுக்கு உரிமை இல்லை என்று தெரிந்திருத்தும் எனக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார்கள் என்றால் ? நான் வில்லங்கசான்றை பார்த்தேன், சரியாக தான் இருந்தது. தாவா சொத்துக்கள் ஆரம்பத்தில் 1ம் பிரதிவாதி கார்த்திகைவேல் மற்ற பிரதிவாதியின் முன்பாத்தியஸ்தர்களான பெரியண்ணகவுண்டருக்கும் பூர்விக வழியில் பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் ? பங்காளிகள் என்று தெரியும். சொத்துக்கள் பற்றி எனக்கு தெரியாது. சர்வே எண்.424/2சி ல் உள்ள 15 செண்ட் நிலத்தினை பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்பதால் தான் 1–ம் பிரதிவாதி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் ? சரியல்ல. எனக்கு வழக்கு பற்றிய விபரங்கள் அனைத்தும் தெரிந்து கொண்டு தெரியாது என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் ? சரியல்ல. தாவா சொத்துக்களில் 15 செண்ட் நிலத்தை பொறுத்து ஆணையர் அறிக்கையில் நான்குமால் போட்டு தெளிவாக குறிப்பிட்டுள்ள நிலையில் அந்த சொத்துக்கள் இந்த பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றால் ? சரியல்ல. அதனால் நான் தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் ? சரியல்ல.

C JAYAPPRAKASH

Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2025.11.07 16:42:26 +0530

சார்பு நீதிபதி
ஒட்டன்சத்திரம்